## பாரதியார்

தமிழ் இதயங்கள் பாரதி என அழைக்கும் பாரதியார் நெல்லை எட்டய புரத்தில் 11.12.1882இல் பிறந்தார். சுப்பிரமணியம் இயற்பெயர். இவர்தம் செல்லப் பெயர் சுப்பையா. 1893இல் அதாவது 11வயதில் பாரதி எனும் பட்டம் இவரை வந்தடைந்தது. தமிழாசிரியராகவும், பத்திரிகை -யாசிரியராகவும் பணிபுரிந்தார். குமரி முதல் காசி வரை பயணம் சென்று புதிய அனுபவங்களைப் பெற்றவர். புதுச்சேரியில் பல ஆண்டுகள் வாழ்ந்தவர். 1921இல் சென்னையில் காலமானார்.

1905இல் சக்கரவர்த்தினி எனும் இதழைத் தொடங்கினார். கல்கத்தா, சூரத் மாநாடுகளில் கலந்துகொண்டார். கவிதையின் பரப்பளவு சமூக நோக்கில் இவரால் விரிவடைந்தது. நோக்கமற்ற கவிதைகளைப் படைக்கும் நிலை மாறி, தமிழ்க் கவிதைகளில் விழிப்புணர்வும், சமூக உணர்வும், தமிழ்ப்பற்றும், நாட்டுப்பற்றும் மிகுந்தன. தன் வரலாறு எழுதுதல், வசன கவிதை ஆகியவை பாரதியாராலேயே முதலில் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டன என்பர். பாரதத்தைப் பாரததேவியாகப் போற்றியவர். சாதிக் கொடுமைகளைச் சாடியவர். நிறத்தால் பேதம் கூடாது என்பதைப் பூனைப் பாடல் மூலம் சுட்டிக் காட்டியவர். தெய்வத்தின் பெயரில் பாருக்குள்ளே சண்டை வேண்டாம் என்று பாடியவர். இதிகாசங்களைத் தம் மக்கள் விழிப்புணர்வு பெறக் கதைக் கருவாக எடுத்துக் கொண்டவர். பாரத ஒற்றுமை உயர் குறிக்கோள் எனின் தமிழ்நாடு செந்தமிழ்த்தேன் எனப் பாடி மகிழ்ந்தவர். விடுதலை கிடைக்குமுன்பே ஞானசூரியன் பாரதி சுதந்திரம் கிடைத்து விட்டதாக மக்களைப் பார்த்துப் பாடும்படிக் கூவிய வானம்பாடி. பெண் சுதந்திரத்தையும் பெண்ணியத்தையும் பாடியவர். மனித உரிமைகள் பாரதி பாடலில் வித்தாய் விழுந்து ஆலாய் முளைத்தன. தனி ஒருவனுக்கு உணவு வழங்க முடியவில்லையெனின் இந்த உலகே தேவையில்லை என்று பாடிய புதுச்சேரி புரட்சிக்குயில் இனிய குயில் பாட்டையும் தந்தது. பாஞ்சாலி சபதமும் தந்தது. பழமையைப் போற்றும் பாரதி புதுமையைப் புகுத்தத் தவறவில்லை சிற்பி. பாலசுப்பிரமணியம் பாரதி பற்றிக் கூறும் கருத்துக்கள் நிறைவானதாகும்.

“அவனுக்கு (பாரதி) நந்தனார் சரித்திரக் கீர்த்தனை மெட்டும் தெரியும்; ஜப்பானியக் ஹைக்கூ லாகவமும் புரியும். தாகூரையும் அறிவான்; வால்ட்விட்மனின் புதுக்கவிதை ஒளியையும் உணர்வான். காளிதாசனான அவன் ஷெல்லிதாசனாகவும் தன்னை அறிவித்துக் கொண்டவன். சுதந்திரத்தையும் பெண்ணுரிமையையும் புதுயுகக் கனவுகளையும் நவநவமான மொழிகளில் பேசியவன்” என்பர்.

பெண் கல்வியின் முதன்மையை உணர்ந்தவன் பாரதி. பட்டங்களையும், சட்டங்களையும் பெண்கள் ஆளவேண்டும் எனக் கருதியவன். ஆணுக்குப் பெண் இங்கே இளைப்பில்லையென்று கும்மியடித்தவன். நாணம் பெண்களுக்கு வேண்டாம்; நாய்களுக்கு வேண்டுமென்றவன்.

பாரதியார் இந்து மதத்தில் பற்றுள்ளவர். அவற்றில் பல புதிய சீர்திருத்தங்கள் வரவேண்டும் என்று விரும்பியவர். பகவத்கீதையை மொழிபெயர்த்தார். வடமொழி சாத்திரங்களை விரும்பிக் கற்றார். கண்ணனிடமும் பராசக்தியிடமும் ஈடுபாடு கொண்டவர். மகாகவி 39 ஆண்டுகளில் மறைந்தது தமிழுக்குப் பெரிய இழப்பு எனினும், அவன் படைத்த படைப்புகள் காலத்தை வென்று மக்கள் மனத்தில் நிலைப்பன. எனவே தான் 1982 ஆம் ஆண்டு இந்தியா முழுவதும் பாரதியாரின் நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடப் பெற்றது. கோவையில் அவர் பெயரில் பல்கலைக் கழகம் ஒன்று அமைத்தது. பாரதி போன்ற மகாகவிகள் நூற்றாண்டு கால இடைவெளிகளிலேயே தோன்ற முடியும்.

### பாரதிதாசன்

29.4.1891 இல் பாரதிதாசன் பாண்டிச்சேரியில் பிறந்தார். இயற்பெயர் கனக சுப்புரத்தினம். தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர். பாரதி மேல் கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என்று மாற்றிக்கொண்டார். சிந்தனைப் புரட்சியின் வெளிப்பாடாய் இவர் கவிதைகள் அமைந்தமையால் புரட்சிக் கவிஞர் என அழைக்கப்பட்டார். இவரது தந்தையார் கனகசபை, தாயார் இலக்குமி அம்மாள், பேரறிஞர் அண்ணாவால் கிடைத்த விருது புரட்சிக் கவிஞர். தொடக்கத்தில் காங்கிரசில் ஈடுபாடு கொண்டு பின்னர்ப் பெரியார் கொள்கையில் ஊறிப்போனவர். பத்திரிகையில் ஆசிரியராகவும் இருந்துள்ளார். திரைப்படப் பாடல்களும் எழுதியுள்ளார்.

பாரதிதாசன் உருவச்சிலை சென்னைக் கடற்கரையில் உள்ளது. புதுவை அரசு ஆண்டுதோறும் பாவேந்தர் பிறந்த நாளைப் பெரிய அளவில் கொண்டாடுகிறது. தமிழக அரசு பாரதிதாசன் விருதினை ஆண்டுதோறும் வழங்கிவருகிறது. பாரதிதாசன் நூல்களும் நாட்டுடைமையாக்கப்பட்டன. பாவேந்தர் பாரதிதாசன் பெயரில் திருச்சியில் ஒரு பல்கலைக்கழகம் இயங்கிவருகிறது. இவை யாவும் புரட்சிக் கவிஞருக்கு நாம் செய்யும் மரியாதை.

பாரதியாரோடு பாரதிதாசன் இருந்த காலத்தில் பக்திப் பெருக்கோடு மயிலம் சுப்பிரமணியன் துதியமுது பாடியுள்ளார். ஆயின் காலமாறுதலில் பெரியார் கொள்கையில் தீவிரமடைந்ததும் பாரதிதாசன் கவிதைப் போக்கும் நெறியும் மாறிவிடுகின்றன. எங்கும் தமிழைக் காண்கிறார். சமுதாயச் சீர்கேடுகளைச் சாடுகின்றார்.

பெண் கல்வியின் இன்றியமையாமையைக் குடும்ப விளக்கில் எடுத்துரைக்கின்றார். பாண்டியன் பரிசில் புதிய உலகத்தைக் காட்டுகின்றார். இயற்கை அழகு, அழகின் சிரிப்பில் வெளிப்படும். காதலும் வீரமும் புரட்சிக் கவியில் மேலோங்கி நிற்கும். எதிர்பாராத முத்தம், குறிஞ்சித் திட்டு முதலிய காப்பியங்களையும், சௌமியன், சேரதாண்டவம், நல்லதீர்ப்பு பிசிராந்தையார் ஆகிய நாடகங்களையும், இருண்டவீடு, தமிழ் இயக்கம், இசையமுது போன்ற கவிதை நூல்களையும் எழுதியுள்ளார். பாரதிதாசன் கவிதைகள் மூன்று தொகுதிகளாக வெளிவந்துள்ளன. தமிழை உயிராகக் கருதியவர் பாரதிதாசன். மணிமேகலைக் காப்பியத்தை மணிமேகலை வெண்பா என எழுதிய பாவேந்தர் தவச் செல்வியாகிய மணிமேகலையைத் தமிழ்ச் செல்வியாக, சமுதாயச் சீர்திருத்த வாதியாகக் காட்டுகின்றார். தமிழ் எப்படிப்பட்டது? நாம் தமிழிடம் எப்படி இருக்கவேண்டும் என்பதை இரண்டு வரிகளில் சுட்டுகின்றார்.

‘தமிழுக்கு அமுதென்றுபேர் - அந்தத்
தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர்.’

பாரதியாரே இவரைப் பெருமையாக ‘ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்புரத்தினம் எழுதியது’ எனக்குறிப்பிடுவர். இவரது பிசிராந்தையார் நாடகம் இவர் மறைந்த பின்னர் 1970இல் சாகித்திய அகாதெமி விருதைப் பெற்றது.

அகவல், எண் சீர்விருத்தம், அறுசீர் விருத்தம் ஆகியவை இவருடைய பாடல்களில் மிகுதியாகப் பயன்படுத்தியுள்ளார். நொண்டிச் சிந்து, கும்மி வகைகளையும் எடுத்தாண்டுள்ளார். எளிமையும், இனிமையும் மிகுந்த கவிதை நடை. எனவேதான் திரு.வி.க பாரதிதாசன் பாட்டு இனிக்கும் என்றார். கவிஞர் சுரதாவும் ‘தடையேதும் இல்லை இவர் நடையில், வாழைத் தண்டுக்கோ தடுக்கின்ற கணுக்களுண்டு’ என்றார். பாரதிதாசன் பரம்பரை என்று கூறுகின்ற அளவிற்கு இவருடைய கவிதை நடையும் கருத்தும் பின்வந்த கவிஞர் பெருமக்களால் பெரிதும் எடுத்தாளப்பட்டது.

பாரதிதாசனின் தமிழ்ப் பற்றினை

‘சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும்
என்சாம்பல் தமிழ்மணந்து வேகவேண்டும்’

எனும் வரிகள் விளக்கும். புதிய சமுதாயம் படைக்க விரும்புவதை

'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்'

என்கிறார்.

பெண் சுதந்திரம் பெற்றால் அப்போதுதான் உண்மை சுதந்திரம். இதனை

'பெண்ணடிமை தீருமட்டும் பேசுந்திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே...

பொதுவுடைமை எப்போது வரும்? 'ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர் உதையப்பராக வேண்டும்...' என்கிறார். கைம்பெண் கொடுமையைக் கண்டிக்கிறார். 'கோரிக்கையற்றுக் கிடக்கு தண்ணே வேரில் பழுத்த பலா' என வாடுகின்றார். அதுமட்டுமின்றி இளம்பெண்ணின் வாழ்க்கை வீணாகக் கூடாது எனும் நோக்கில்

'பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?'

என்கிறார்.

சாதி, சாதி என்பவனைப் பார்த்து

'இருட்டறையில் உள்ளதடா உலகம் சாதி
இருக்கின்ற தென்பானும் இருக்கின்றானே...'

என வருந்துகின்றார்.

இயற்கை, சாதி, சமுதாயம், தமிழ் என்றில்லாது காதலையும் அழகாய்ப் பாடுகின்றார். இருவர் சந்திப்பின் முடிவு என்னவாகியது!

'கூடத்திலே மனப் பாடத்திலே - விழி
கூடிக் கிடந்திடும் ஆணழகை
ஓடைக் குளிர்மலர்ப் பார்வையினால் - அவள்
உண்ணத் தலைப்படும் வேளையிலே
பாடம்படித்து நிமிர்ந்த விழிதனில்
பட்டுத் தெறித்தது மானின் விழி
ஆடைத் திருத்தி நின்றாளவள் - இவன்
ஆயிரம் ஏடு திருப்புகின்றான்'.

இதுபோன்று இளமைக்காதல் மட்டுமின்றி முதியோர் காதலும் பாடியவர்.

இலக்கிய உலகில் எண்ணற்ற கவிஞர்கள் பல்துறைகளில் புரட்சி செயினும் ஒரு நூற்றாண்டாக 'புரட்சிக் கவிஞர்' எனின் அது பாரதிதாசனைக் குறிப்பது எனும் பெருமை பாரதிதாசனுக்கு மட்டுமே உரியது. குயில் இதழின்

ஆசிரியராக இருந்து பாடிய (எழுதிய) இக்குயில் 1964இல் பாடுவதை (எழுதுவதை) நிறுத்தியது. ஆயின் அவரைப் பின்பற்றி இன்று ஆயிரங் குயில்கள் கவிமழை பொழிகின்றன.

## கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

பிறந்த ஊர் கன்னியாகுமரி மாவட்டம் தேரூர். திருமணத்திற்குப் பின் இவர் வாழ்ந்த ஊர் புத்தேரி. 1876இல் சிவதாணு பிள்ளைக்கும், ஆதிலட்சுமி அம்மையாருக்கும் பிறந்தார். கி.பி.1895இல் முதன்முதலாக இவர் எழுதிய கவிதை அழகம்மை ஆசிரிய விருத்தம். சென்னை தமிழ்ச் சங்கம் 1940இல் இவருக்குக் 'கவிமணி' எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. கவிமணி கவிதை பற்றிக் கொண்ட கருத்து யாது?

'உள்ளத் துள்ளது கவிதை - இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை
தெரிந்துரைப்பது கவிதை'

எனத் தெளிவுபட விளக்குகின்றார்.

நாஞ்சில் வேளாளர் குடும்பத்தில் பிறந்த கவிமணி, அவர்களின் மருமக்கள் வழி முறையை எள்ளி நகையாடி எழுதிய குறுங்காப்பியம் 'நாஞ்சில் நாட்டு மருமக்கள் வழி மான்மியம்' மிகச் சிறந்த எள்ளல் காப்பியம். 'மலரும் மாலையும்' எனும் தலைப்பில் இவர் தம் பாடல்கள் கவிதைத் தொகுதியாகி உள்ளது. எளிமையும், இனிமையும் இவர் கவிதைகளின் உள் மூச்சு எனலாம்.

உமர்க்கய்யாம் பாடல்கள், ஆசியசோதி இரண்டும் இவரது மொழிபெயர்ப்பு, ஆயின் மொழி பெயர்ப்பு என்று அறியமுடியா அளவிற்குக் கருத்துக்களை உள்வாங்கி எளிய நடையில் யாத்துள்ளார். பெண்களைப் புகழ்ந்து பேசி 'மங்கையராய்ப் பிறக்க மாதவம் செய்ய வேண்டும்' என்கிறார்.

டி.கே.சி அவர்கள் கவிமணியின் பாடலில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். கரும்பினும் இனிமை பெற்ற கவிமணி 'தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்கள் தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம்; அரிய செல்வம்; தெவிட்டாத அமிர்தம்...' எனப் புகழ்வார். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையும்

'தேசிக விநாயகத்தின் கவிப்பெருமை
தினமும் கேட்பது என் செவிப் பெருமை'

எனப் பாராட்டுவார். எவ்வளவு பெரிய கருத்தாக இருப்பினும் அதனை எளிமையாக்கிக் காட்டுவதே கவிமணியின் கவிதை வளமாகும். சாதி தேவையற்றது என்பதை

'ஓடும் உதிரத்தில் - வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் - சாதி
தெரிவதுண்டோ அப்பா'

என்று வைதீக நெறியைச் சாடிய புத்தர் மூலமாக உணர்த்துகின்றார். கவிமணியின் கவிதை நடை கற்போருக்கு எளிமைதரும் இனிய நடை.

## நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

காந்தியவாதி. விடுதலைப் போராட்ட வீரர். கத்தியின்றி யுத்தம் செய்த காந்தியடிகளை வணங்கிய செம்மல். செயலால் காந்தியடிகளையும், பாட்டால் பாரதியாரையும் தம் குருவாக ஏற்றுக் கொண்டவர். பாரதிக்குப் பதில் அந்த இடத்தை நிரப்புவார் என இராஜாஜியார் பாராட்டப்படும் பேற்றினைப் பெற்றவர். அவனும் அவளும் எனும் தலைப்பில் ஒரு காப்பியம் எழுதியுள்ளார். இவர் எழுதிய மலைக்கள்ளன் சிறந்த நாவலாகும். திரைப்படமாக வெளிவந்து பெரும் புகழ் பெற்றது.

காந்தி அஞ்சலி எனும் தலைப்பில் இவர் எழுதிய கவிதைகள் சிறப்பானவை. 'தமிழன் என்று சொல்லடா! தலை நிமிர்ந்து நில்லடா' என முழங்கியவர். மேலும்

'தமிழன் என்றோர் இனம் உண்டு
தனியே அவற்கோர் குணம் உண்டு
அமிழ்தம் அவனுடைய மொழியாகும்
அன்பே அவனுடைய வழியாகும்
மானம் பெரிதென உயிர்விடுவான்
மற்றவர்க்காகத் துயர்ப்படுவான்
தானம் வாங்கிடக் கூசிடுவான்
தருவதுமேல் எனப் பேசிடுவான்'

என முழங்குகின்றார்.

1949இல் தமிழக அரசின் முதல் அரசவைப் புலவராகவும், தமிழக மேலவை உறுப்பினராகவும் இருந்து தமிழை வளர்த்தவர்.

## சுத்தானந்த பாரதியார்

பாரதியின் நெறியைப் பின்பற்றியவர். புதுவை அரவிந்த ஆசிரமத்து யோகியாய் வாழ்ந்தார். கவிதை எழுதியதால் கவியோகி எனவும், தவசியாய் இருந்ததால் மகரிஷி எனவும் அழைக்கப்பட்டார். பல்துறை அறிஞர். இவர் தொடாத துறைகள் இல்லை எனலாம். உண்ணும் போதும் உறங்கும் போதும் தமிழையே எண்ணவேண்டும் என்கிறார். தாலி விலங்கு என்று கூறி ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதியா என வினவுகிறார்.

இவரது நரிக்குறத்திப்பாட்டு நாட்டுப்புற நயம் மிக்கது. நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். பாரதசக்தி மகாகாவியம் இவரது மிகப் பெரிய காப்பிய நூல்.

***ச.து. சுப்பிரமணிய யோகியார்***

இவரது தமிழ்க் குமரி கவிதை நூல் சிறந்த கவிதைப் படைப்பு. கௌதம முனிவரின் அகலிகையை இவர் புதிய கோணத்தில் தமது கவிதையில் அமைத்துள்ளார். பத்திரகாளியிடம் மிகுந்த பக்தி கொண்டவர். உமர்க்கய்யாமின் பாடல்களையும், புதுக்கவிதையின் தந்தை வால்ட் விட்மனின் பாடல்களையும், தமிழில் யாத்துள்ளார். மேரி மக்தலேனா எனும் கதைப்பாடல் ஏசுவின் பெருமை பேசுவது. இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட யோகியார் வளையாபதி, காமினி எனும் தலைப்பில் இரு இசை நாடகங்களை இயற்றியுள்ளார்.

***சுரதா***

1921ல் பிறந்த சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். தம் பெயரைப் பாரதிதாசன் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாகச் சுப்புரத்தினதாசன் எனமாற்றி அதனைச் சுருக்கிச் சுரதா என வைத்துக்கொண்டார். இவரது கவிதைகளில் உவமைகளின் செல்வாக்கு மிகுதி கருதி இவர் உவமைக் கவிஞர் என அழைக்கப்பட்டார். இவரது கவிதைத் தொகுப்புகளில் குறிப்பிடத்தக்கன தேன்மழை, சிரிப்பின் நிழல், சுவரும் சுண்ணாம்பும், அமுதும் தேனும், துறைமுகம், உதட்டில் உதடு, தொடா வாலிபம் முதலியன.

கலைமாமணி பட்டம் பெற்றவர். 1978இல் முதன் முதலாகப் பாவேந்தர் விருதுபெற்ற சிறப்புக்குரியவர். காவியம் என்கிற வார இதழையும், இலக்கியம், ஊர்வலம், விண்மீன் ஆகிய திங்கள் இதழ்களையும் நடத்தினார். சிவாஜி பத்திரிகையிலும், பிரசண்ட விகடனிலும் இவரது எழுத்துக்கள் தொடக்க காலத்தில் வெளிவந்தன.

அறிஞர் வ.ராமசாமி (வ.ரா) சுரதாவின் கவிதை இன்பத்தில் திளைத்து 'மற்றொரு பாரதி பிறந்து விட்டான்' எனப் பாராட்டினார். திரைப்படத்துறையில் மிகுந்த ஈடுபாடு உண்டு. திரைப்படங்களுக்கு வசனமும் பாடலும் எழுதியுள்ளார். தங்கமலை ரகசியம் திரைப்படத்தில் 'அமுதைப் பொழியும் நிலவே, நீ அருகில் வராததேனோ' எனத் தொடங்கும் பாடல் பலகாலத்திற்கு இரசிகர்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்று விளங்கியது. இவருடைய உவமை கூட இலக்கணமாய் அமைகிறது. அத்தியும், ஆதிமந்தியும் சந்திக்கின்றனர். இக்காட்சியைச் சுரதா பாடுகின்றார்

'வரலாற்றுப் பேரழகி ஆதிமந்தி
எதுகை வரல்போல் அடுத்து வந்தாள், அத்தி
என்பானோ மோனையைப் போல் முன்னே வந்தான்'

எதுகையும் மோனையும் இணைய இலக்கணத்தோடு இலக்கியக் காதல் பிறக்கின்றது.

***முடியரசன்***

இயற்பெயர் துரைராஜ். புதுமை உள்ளம், தமிழ்ப்பற்று, சமூகவிடியலைத் தேடும் உள்ளம் இவைகளே முடியரசனின் குணங்கள். காரைக்குடியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்தவர். வீரகாவியம், பூங்கொடி இவர் இயற்றிய காப்பியங்களாகும். தமிழ் எப்படியெல்லாம் தப்பிப் பிழைத்தது என்பதை மூன்றே வரிகளில் அருமையாக விளக்குகின்றார்.

'கடல் பொங் கலையில் கறையான் வாயில்
சுடர்எரி நாவில் அழிபடும் ஆற்றில்
தப்பிப் பிழைத்த தமிழே என்கோ' என்கிறார்

இவரது முகில் விடுதூது, தாலாட்டுப் பாடல்கள் சிறப்பு மிக்கன. கவியரங்கில் பங்கேற்று இவர் பாடிய கவிதைகள் கவியரங்கில் முடியரசன் எனும் நூலானது. முடியரசன் கவிதைகள், பாடுங்குயில், காவியப்பாவை, ஞாயிறும் திங்களும், மனிதனைத் தேடுகிறேன் ஆகியவை இவரது கவிதைத் தொகுதிகள். இவருடைய கவிதைகள் பொன்னி, குயில், கதிரவன் போன்ற பல்வேறு சிற்றிதழ்களில் வெளிவந்தன. அறிஞர் அண்ணா இவரைத் தமிழ்நாட்டின் வானம்பாடி எனப் புகழ்ந்துரைத்தார். அண்ணாமலை அரசர் நினைவு அறக்கட்டளை ஐம்பதாயிரம் ரூபாய் பரிசளித்துக் கௌரவித்தது. கவியரசு பட்டம் பெற்ற முடியரசன் தமிழில் பிறமொழிக் கலப்பதை வன்மையாக எதிர்த்தவர்.

***வாணிதாசன்***

புதுவையை அடுத்த வில்லியனூரில் பிறந்தவர். இயற்பெயர் எத்திராசலு. தமிழ்ப்பற்று மிக்கவர். ஆனந்த விகடன் போன்ற பல இதழ்களில் இவர் கவிதை வெளிவந்துள்ளது. தமிழச்சி, கொடிமுல்லை, எழிலோவியம், வாணிதாசன் கவிதைத்தொகுதி 1, வாணிதாசன் கவிதைத் தொகுதி 2 ஆகியவை இவரது கவிதைத் தொகுதிகளாகும்.

வறுமையும், செல்வமும் பிறப்பால் அமைவதில்லை. இதனை வாணிதாசன்

'பிறப்பினிலே உயிரினங்கள் யாவையுமே ஒன்றாம்!
பேச்சில்லை வறுமைக்கே கொடுவாளைத் தூக்கே'

என ஆவேசமாகக் குறிப்பிடுகின்றார். பாரதிதாசன் பரம்பரைக்குப் பெருமை சேர்க்கும் கவிஞர் வாணிதாசன்.

### பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

மக்கள் கவிஞர் எனும் பாராட்டுப் பெற்ற இவர் 1930இல் பிறந்தார். வாழ்ந்த ஆண்டுகள் 29யேயாகும். பொதுவுடைமைக் கொள்கையில் ஈடுபாடு கொண்டவர். இவரது பாடல்களில் இக்கருத்துக்கள் மிகுந்திருக்கும். நாடகம், திரைப்படங்களுக்கு மிகுதியாகப் பாடல்கள் எழுதியுள்ளார். இவரது பாடல்களைத் தொகுத்துப் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள் என வெளியிட்டுள்ளனர். சிறுவயதில் பல்வேறு தொழில் செய்த அனுபவம் இவருக்குண்டு. அவ் அனுபவங்களே இவரைப் பொதுவுடைமையில் இணைத்தது. பாமர மக்களுக்காகப் பாடிய கவிஞர் இவர் எனக் கூறின் தவறன்று. ஜனசக்தி நாளிதழில் இவரது கவிதைகள் வெளிவந்தன. கவிதைகளில் எளிமையும் கருத்துக்களை வலிந்து திணிக்காத தன்மையும் இவருக்கு வெற்றியைத் தேடித் தந்தன. தூங்காதே தம்பி தூங்காதே, ஆளும் வளரணும் அறிவும் வளரணும், இரைபோடும் மனிதருக்கே இரையாகும் வெள்ளாடே, செய்யும் தொழிலே தெய்வம் போன்ற நல்ல கருத்துக்கள் இவர் பாடல்களில் இடம் பெற்றுள்ளன.

### கண்ணதாசன்

'கவியரசு' பட்டம் பெற்ற கண்ணதாசன் இயற்பெயர் முத்தையா. பிறந்த ஊர் சிறுகூடல்பட்டி. சண்டமாருதம், தென்றல், கண்ணதாசன், முல்லை போன்ற பல இதழ்களில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவருக்கு வணங்காமுடி, பார்வதிநாதன் என்ற புனைப்பெயர்களும் உண்டு. இவர்பெற்ற அனுபவங்களே கவிதைகளாக மலர்ந்தன. எனவேதான் இவர்தம் கவிதையில் அனுபவமே கடவுள் என்கிறார். திராவிடக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பெரியாரின் சீடராய், அண்ணாவின் தொண்டராய்ப் பகுத்தறிவு பேசியதும் உண்டு, அதற்குமாறாய்ப் பக்திப் பழமாகி அர்த்தமுள்ள இந்து மதம் கண்டு பஜகோவிந்தம் எழுதி மகிழ்ந்ததும் உண்டு. சமயப் பொறைக்கு எடுத்துக்காட்டாய் ஏசுகாவியம் பாடி உயர்ந்ததும் உண்டு.

இவரைக் குழந்தை மனம் கொண்ட கவிஞர் என்பர். தத்துவப் பாடல்களையும் புரியும்படி எளிமையாக எழுதும் ஆற்றல் மிக்கவர். சொற்சிலம்பம் கவிதைகளில் மிகுதி. தேன், தேன் என்று வரும் வகையிலும், காய், காய் என்று வரும் வகையிலும் இவர் பாடிய பாடல்கள் மறக்க முடியாதனவாகும்.

'வீடுவரை உறவு, வீதிவரை மனைவி' எனும் சாதாரண வாசகங்கள் இவர் எழுத்தில் தத்துவமாய் மிளிர்கின்றன. பிறப்பையும் இறப்பையும் வரவாகவும் செலவாகவும் பாடுகின்றார். காதல் பாடல்கள் இவருக்குக் கைவந்த கலையாய் இருந்தன. வார்த்தை ஜாலமின்றி எளிமையோடு சந்த நயத்தோடு அமையும் கண்ணதாசன் பாடல்கள் படித்தவுடன் மனத்தில் பதிந்து விடும் தன்மையன.

1948இல் திரையுலகில் நுழைந்த கண்ணதாசன் கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் திரைப்படப் பாடல்கள் எழுதிச் சாதனை புரிந்தார்.

திரைப்படத்திற்கு இவர் எழுதிய கடைசிப் பாடல் ஏசுதாஸ் குரலில் அமைந்த கண்ணே கலைமானே. இப்பாடல் இன்றும் கேட்போரைப் பிணிக்கும் தன்மையதாய் உள்ளது.

தமிழக அரசின் ஆஸ்தானக் கவிஞராக இருந்தவர். சேரமான் காதலி இவருக்கு சாகித்திய அகாதமி விருதைப் பெற்றுக் கொடுத்தது. இவரது உரைநடையும் கவிதை போல் அழகு தரும். ஆட்டனத்தி ஆதி மந்தி, தைப்பாவை, மாங்கனி, இயேசு காவியம் போன்ற தனி நூல்களும் பாடியுள்ளார். கண்ணதாசன் கவிதைகள் எனப் பல தொகுதிகளும் வெளிவந்துள்ளன. இவரது அர்த்தமுள்ள இந்துமதம் பல தொகுதிகள் மட்டுமின்றிப் பலபதிப்புகளையும் கடந்தது. 1981இல் இவர் இயற்கை எய்தினாலும் இவர் படைத்த கவிதைகள் இறவா வரம் பெற்றவை. திரைப்பாடல்கள் மட்டுமின்றித் தனி நூல்களிலும் எளிமையைக் கடைப்பிடித்தார். ஏசுபிரான் பரலோகம் அடைந்ததை

'வானில் இருந்து பூமழை ஒன்று
மண்ணில் உதிர்ந்தோட
மந்திரமேகம் சந்தடி செய்து
மங்கல இசைபாட
ஆநிரை மந்தை ஆடுகள் எல்லாம்
ஆயரைக் கொண்டாட
அந்தரமீதில் சென்று நடந்தார்
தந்தையைக் கண்டாட'

இவ்வரிகள் ஏசுபிரானோடு நம்மையும் அழைத்துச் செல்கின்றன. கவிஞர். கண்ணதாசனின் வெற்றி இதுவேயாகும்.

### *புலவர் குழந்தை*

பிறந்த ஊர் ஈரோடு மாவட்டம் ஓலவலசு. பிறந்த ஆண்டு 1906. முப்பது நூல்கள் படைத்துள்ளார். இராவணகாவியம் எனும் காப்பியம் படைத்து இராவணனை உயர்ந்தோனாய்க் காட்டுகின்றார். பெரியார் கொள்கையில் ஈடுபாடு கொண்டவர். இலக்கணம், இலக்கியம், திறனாய்வு, வரலாறு எனப் பல்வேறு துறைகளில் நூல்கள் எழுதியுள்ளார். தமிழெழுத்துச் சீர்திருத்தத்தில் இவருடைய முயற்சி மிகுதி எனலாம்.

இராவணகாவியம் இந்துக்களைப் புண்படுத்துவதாகக் கருதி 1948இல் காங்கிரஸ் ஆட்சி இந்நூலைத் தடைசெய்தது. 1971இல் தி.மு.க. ஆட்சியில் தடை நீக்கப்பட்டது. இவர் எழுதிய காமஞ்சரி நாடகம் மிகச் சிறப்பான செய்யுள் வடிவ நாடகமாகும்.

### *பெருஞ்சித்திரனார்*

இயற்பெயர் மாணிக்கம். தென்மொழி, தமிழ்ச் சிட்டு ஆகிய இதழ்கள் நடத்தினார். தென்மொழி தனித்தமிழ்க் கொள்கை பரப்புவதில்

நல்லுண வுண்ணா திருப்பாயேல்
நன்குழைத் திடவலி விருக்காது!
உழைப்பாய் உண்பாய் அளவோடு!
உவப்பாய் செழிப்பாய் வாழ்நீடு!
வகையாய் இரண்டும் செய்யாதார்
வாழ்வே நரகம்! நரகமடா!

## தமிழ் ஒளி

பாரதிதாசன் மரபையொட்டிப் பாடுவதில் வல்லவர். நாற்பது ஆண்டுகளே வாழ்ந்தாலும் ஓசை நயமும் கருத்துச் சுவையுமிக்க பாடல்களைத் தந்தவர். இவர் இயற்பெயர் விஜயரங்கம். புத்தரின் வாழ்க்கையைக் காவியமாகப் பாடியவர். இவர் எழுதிய சிறுகாப்பியம் வீராயி நல்ல கருத்துக்களைக் கொண்டது. கி.வா.ஜ இவருடைய கவிதைகளை மிகுதியும் பாராட்டி 'அவை அவர் அடிமனத்தின் சோகத்தின் வெளிப்பாடுகள்' என்பர்.

## கொத்தமங்கலம் சுப்பு

இவரது பாடல்களில் நாட்டுபுறப் பாடல்களின் தாக்கம் மிகுதி. இவர் வில்லுப் பாட்டு கலைஞராகவும் விளங்கினார். இவருடைய நாவல் தில்லானா மோகனாம்பாள் சிறந்த படைப்பாகும். திரைப்படமாக வந்து பெரும் வெற்றி பெற்றது. காந்தி மகான் கதை, பாரதி கதையையும் நூலாக எழுதியவர். இவரது கம்பராமாயணச் சிந்து இசையோடு படிக்கும் நூல். இவரது பாடல்கள் பாமர மக்களையும் ஈர்க்கும் தன்மையது.

பெரிய மனுஷன் புளுகினாக்க பேப்பரிலே போடுறான்;
சின்ன மனுஷன் புளுகினாக்க செயிலுக்குள்ளே போடுறான்
கன்னக்கோலு களவடிச்சா கட்டி வச்சு வாங்குறான்
கள்ளச் சந்தை காரங்கிட்டே கையால் பிச்சை வாங்குறான்

மேற்குறிப்பிட்ட கவிஞர்கள் தவிர மரபுக் கவிதைகள் பாடிய கவிஞர்கள் எண்ணற்றறவர்கள் உள்ளனர். அப்துல் ரகுமான், மேத்தா, நா.காமராசன், சிற்பி போன்ற கவிஞர்கள் தொடக்கத்தில் மரபுக் கவிதையெழுதிப் பின்னர்ப் புதுக்கவிதைக்கு வந்தவர்களேயாவர். கம்பதாசன், சோமு, சாலை இளந்திரையன், கா.மு. ஷெரிப், பெ.தூரன், கலைஞர். கருணாநிதி போன்றோர் தமிழ் மரபுக் கவிதைகளைத் தங்கள் ஆற்றல் மிகு கருத்துக்களாலும் நடையழகாலும் ஏற்றம் பெறச் செய்தனர்.

# புதுக்கவிதை

'கற்பனைகள் ஆசையோடு குதித்தெழும் போது சுவையான கவிதை பிரசவமாகிறது; எண்ணங்கள் தடையின்றி, இதிலிருந்து இதுவரை என்ற வரம்பின்றிப் பிரவாகம் போல் ஓடும் போது அபூர்வமான முத்துக்கள் சிதறுகின்றன' என்பார் கண்ணதாசன். குதித்தெழும் கற்பனைகளுக்கு யாப்புத்

தடையாகிய போது அதனை உடைத்தெறிந்து புது வெள்ளமாய்ப் புறப்பட்டது தான் புதுக்கவிதை. இதனை மு.மேத்தா

‘இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
மோனைத் தேர்கள்
தனிமொழிச் சேனை
பண்டித பவனி
இவை எதுவுமில்லாத
கருத்துக்கள் தம்மைத்
தாமே ஆளக்
கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி
முறையே
புதுக்கவிதை

எனப்புதுக் கவிதையில் விடை தருவார்.

யாப்பின் கடினம் உணரப்பட்ட போது ஒரு புது முயற்சி உருவானது. அமெரிக்க அறிஞர் வால்ட் விட்மன் ஆங்கிலத்தில் ‘புல்லின் இதழ்கள்’ என்ற நூலை இயற்றினார். யாப்பின்றி வெளிவந்த இந்நூல் கட்டுப்பாடற்ற கவிதையாக முதலில் கருதப்பட்டது. பிரிட்டனின் ஆளுமையிலிருந்து விடுபட்ட அமெரிக்காவின் சுதந்திர உணர்வாய் இக்கவிதையை அந்நாட்டு மக்கள் கருதினர். யாப்பிலிருந்து விடுதலை எனும் பொருளில் (Free Verse) முதலில் வழங்கப்பட்டது.

யாப்பின்றி மேலை நாட்டு முறையில் தமிழ்க் கவிதையைக் கொண்டு செல்ல வேண்டும் என்ற தூண்டுதலில் 1934ஆம் ஆண்டளவில் புதுக்கவிதை முறையைச் சோதனையாக ஆரம்பித்து பார்த்ததாகப் புதுக்கவிதையின் தந்தை எனப்படும் ந.பிச்சமூர்த்தி குறிப்பிடுகின்றார். இக்காலக் கட்டத்திலேயே மணிக்கொடி இதழும் தோன்றியது. மணிக்கொடி எழுத்தாளர்கள் புதுக்கவிதை முயற்சியிலும் ஈடுபட்டனர்.

மணிக்கொடி இதழில் எழுதிய புதுமைப்பித்தன், கு.ப. ராஜகோபாலன், வல்லிக்கண்ணன், சி.சு. செல்லப்பா, ந. பிச்சமூர்த்தி போன்றோர் புதுக்கவிதைகளை எழுதினர். இதில் ந. பிச்சமூர்த்தி மட்டுமே நிறைவான வெற்றி பெற்றவர். புதுமைப் பித்தனின் புதுக்கவிதைகளில் எள்ளல் சுவை இருந்தது கவித்துவம் இல்லை. விடுதலைக்கு முன் மணிக்கொடி எழுத்தாளர்களும் தருமு சிவராம், ஷண்முக சுப்பையா போன்றோரும் எழுதிய போதிலும் அதன் வேகம் விடுதலைக்குப் பின்னரே தீவிரமாகியது. மக்கள் மத்தியில் செல்வாக்கான இடத்தைப் பெற்றது. வால்ட் விட்மனிடம் ஈடுபாடு கொண்ட பாரதியார் ‘வால்ட் விட்மன்’ என்ற தலைப்பில் வசன கவிதை எழுதினார். ந. பிச்சமூர்த்திக்கு முன்பே வசன கவிதையைத் தொட்டு விட்டவர்

என்ற நிலையில் பாரதியைப் புதுக்கவிதையின் முன்னோடி எனவும், ந. பிச்சமூர்த்தியைத் தந்தை எனவும் கூறுதல் பொருத்தமாகும்.

பாரதி வால்ட் விட்மனைப் பற்றி எழுதிய காட்சிகள் எனும் வசனகவிதை அக்காலத்தில் பெரிய செல்வாக்குப் பெறவில்லை. அமெரிக்காவிலும் தொடக்க காலத்தில் விட்மனுக்கு எதிர்ப்பேயிருந்தது. விட்மனை அடுத்து இங்கிலாந்தில் கவிஞர் டி.எஸ். எலியட் எழுதிய பண்படாநிலம் (Waste Land) பெரும் செல்வாக்குப் பெற்றதோடு நோபல் பரிசும் பெற்றது. பாரதியின் வசன கவிதையும் முதலில் கேட்பாரற்றுப் பின்னர்ப் பிச்சமூர்த்தி போன்றோர் இத்துறையில் இறங்கியதும் செல்வாக்குப் பெற்றது. இங்கு ஏன் எழுச்சி இல்லை என்பதற்கு அக்னிபுத்திரன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் ‘பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தோன்றிய கட்டற்ற கவிதையின் ஊற்றுக் கண்களாக அமெரிக்கத் தேசியத்தின் தன்னுரிமை வேட்டை இருக்கையில், பிரான்சில் தோன்றிய விடுநிலைப்பாவின் ஊற்றுக் கண்களாகப் பிரெஞ்சுத் தேசியத்தின் விழுமியங்கள் காரணங்களாக இருக்கையில் தமிழ்ப் புதுக்கவிதைகளின் தோற்றத்திற்குத் தமிழ்த் தேசியப் பண்புகளும் விழுமியங்களும் காரணங்களாக அமைந்தனவா என ஆய்தல் வேண்டும்’ என்கிறார்.

வானில் திரியும் காற்றுபோல் கட்டற்றுத் திரியும் புதுக்கவிதைக்குத் தொடக்க காலத்தில் பல்வேறு பெயர்கள் சூட்டப்பட்டன. உரைவீச்சு, வசனகவிதை, விலங்கற்ற கவிதை, உரைப்பா, விடுநிலைப்பா, கட்டற்ற கவிதை எனப் பல பெயர்கள். வசன கவிதையா என மரபுக்கவிதையாளர்கள் கேலி செய்தனர். மரபுக் கவிதை என்கிற அப்பளம் புதுக்கவிதை காற்றின் முன் நிற்க முடியாது உடைந்தது எனப் புவியரசு மரபைக் கேலி செய்தார்.

காலப்போக்கில் மரபுக் கவிஞர்கள் புதுக்கவிதையை நாடினர். தமிழகத்தில் மட்டுமின்றி இம்மாற்றத்தை உலகக் கவிஞர்களிட்மும் காண முடிகிறது. மரபுக் கவிதைகள் பாடிய ஐரிஷ் நாட்டுக் கவிஞர், ய.ந.ஈட்ஸ், ஆங்கில மரபுக் கவிஞர் டி.எஸ். எலியட், இந்தியக் கவிஞர் இரவீந்திரநாத் தாகூர் ஆகிய முப்பெரும் கவிஞர்களும் முறையே 1923, 1948, 1913லும் தங்கள் கவிதைகளுக்காக நோபல் பரிசு பெற்றனர். இதில் வியப்பென்னவெனின் இந்த மூன்று மரபுக் கவிஞர்களும் பின்னர் புதுக்கவிதைகள் எழுதத் தொடங்கினர். அதிலும் குறிப்பாக டி.எஸ். எலியட்டும் (Waste Land) தாகூரும் (கீதாஞ்சலி) புதுக்கவிதைக்கே நோபல் பரிசு பெற்றனர்.

பாரதியின் ‘காட்சி’ விட்மனின் தாக்கத்தில் பிறந்தது என்பர் சி.சு. செல்லப்பா அவர்கள். பாரதி தன் கவிதையைக் குறிப்பிடும் போது

‘சுவை புதிது பொருள் புதிது வளம் புதிது
சொற்புதிது சோதிமிக்க நவகவிதை’ பொருந்தும்.

என்பர். இது புதுக்கவிதையின் இலக்கணத்திற்குப் பொருந்தும். தமிழ்த்திறனாய்வாளர்கள் சிலர் ந. பிச்சமூர்த்தியே புதுக்கவிதையின் முன்னோடி என்பர். இது தவறாகும். இதனைப் பிச்சமூர்த்தியின் கூற்றே மெய்ப்பிக்கும்.

'வால்ட் விட்மனின் புல்லின் இதழ்களைப் படித்தபோது கவிதையின் ஊற்றுக்கண் தெரிந்தது. பின்னர் பாரதியின் வசன கவிதையைப் படிக்க நேர்ந்தது. என் கருத்து அதனால் வலிமை பெற்றது. இவற்றின் விளைவாக என் உணர்ச்சிப் போக்கில் இக்கவிதைகளை எழுதினேன்' எனக்கூறி அவர் பாரதியைச் சுட்டுவதைக் காணமுடிகிறது.

1930 முதல் 1945வரை மணிக்கொடி காலம் எனக் கூறினும் 1933 முதல் 1937 வரையில் தான் மணிக்கொடி இதழ் வந்தது. அதன் தாக்கத்தை முன்னும் பின்னுமாகச் சேர்த்துத் திறனாய்வாளர் சுட்டுவர்.

## 'எழுத்து' காலம்

மணிக்கொடி கவிஞர்களைப் பெரிதும் பாதித்தவர்கள் படிமவாதிகளே. ஹீல்மேதாமஸ் எர்னால்ட் தான் படிமவியல் இயக்கத்தில் இங்கிலாந்து கவிஞர்களில் முதன்மையானவர். அடுத்து ரிச்சர்ட் ஆல்டிங்க்டன் அவரது மனைவி ஹில்டா ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். புதுக்கவிதைக்கு உரமூட்டிய எஸ்ராபவுண்ட் இந்த இயக்கத்தைச் சார்ந்தவரே. 1906இல் இவரும் ஹில்டாவும் சந்தித்தது புதுக்கவிதை வரலாற்றில் மறக்கமுடியா நிகழ்வாகத் திறனாய்வாளர்கள் கருதுகின்றனர். உலகின் முதல் படிமக்கவிதை 1908 மே 26இல் ஒரு உணவு விடுதியின் விலைச்சீட்டின் பின்புறத்தில் டி.யூ. ஹ்யூமால் எழுதப்பட்டது. தலைப்பு 'கதிரவன் மறைவு' ஆகும். இப்படிம யுத்தி தமிழ்ப் புதுக்கவிதைகளில் பெரும் வெற்றி பெறவில்லை.

ந. பிச்சமூர்த்தி இதில் ஓரளவு வெற்றி பெற்றார். பின்வந்த தருமு சிவராம், சி.மணி, வைத்தீஸ்வரன், பசவய்யா போன்றோரும் இம்முயற்சியில் ஈடுபட்டனர். மணிக்கொடி நின்று போயினும் அப்பொழுது கிராம ஊழியன், கலாமோகினி போன்ற இதழ்கள் புதுக்கவிதைகளை வெளியிட்டன. இக்காலத்தில் க.நா.சு. வசன கவிதையும் திறனாய்வுக் கட்டுரைகளும் எழுதியதோடு சூறாவளி எனும் இதழையும் வெளியிட்டார். 1942இல் தோன்றிய கலாமோகினி கவிதைகளுக்கு ஊக்கமளித்தது. 1959 சனவரியில் சி.சு. செல்லப்பா அவர்கள் 'எழுத்து' இதழைத் தோற்றுவித்தார்.

எழுத்தின் தொடக்கத்தில் புதுக்கவிதை எழுதியோர் சி.சு. செல்லப்பா, பசுவய்யா (சுந்தரராமசாமி), சி.மணி, தருமு சிவராமு, வைத்தீஸ்வரன் ஆகியோர். இக்காலத்தில் மேலை நாட்டின் பிராய்டிச உளவியல் கோட்பாடுகளுக்குக் கலைவடிவம் காணும் முயற்சியை இவர்கள் மேற்கொண்டனர். இதனை மிகை மெய்மையியல் என்றனர். எல்லாமே பாலியலில் அடங்கும் என்பது ஃபிராய்டின் கொள்கையாகும். இக்கோட்பாட்டை மிகுதியும் பின்பற்றிக் கவிதை எழுதியோர் சி.மணியும், தருமு. சிவராமுவும் எனலாம். எழுத்து இதழ் காலப்போக்கில் சமூக விழிப்புணர்வு கவிதைகளை வெளியிட்டது.

எழுத்துக்காலத்தில் சரஸ்வதி, இலக்கிய வட்டம், நடை, தாமரை, கசடதபற போன்ற இதழ்கள் தோன்றிப் புதுக்கவிதைகளை வெளியிட்டன. எனினும் 1963இல் க.நா.சு தோற்றுவித்த இலக்கிய வட்டம் நல்ல கவிதைகளை வழங்கியது.

### வானம்பாடிக் காலம்

ஃபிராய்டின் கோட்பாடுகளை எதிர்த்து 1970களில் மார்க்சிய பொருளியல் கோட்பாடுகளைக் கொண்டும், மனித நேயத்தை நோக்கமாகக் கொண்டும் சிலர் புதுக்கவிதைகளை உருவாக்கத் தொடங்கினர். இக்காலத்தில் புதுக்கவிதை புதிய பரிமாணத்தைப் பெற்றது. மார்க்சிய சிந்தனைகளை வளர்த்த தாமரை இதழ்களில், தரமான புதுக்கவிதைகள் மலர்ந்தன. தீபம், கணையாழி, சதங்கை ஆகிய இலக்கிய இதழ்கள் புதுக்கவிதைகளை வெளியிட்டன. விலையில் வாரமடலாக 'வானம்பாடி' இதழ் வலம் வரத் தொடங்கியது. இலக்கியத் தாகம் தேடியலைந்த பறவைகள் இதில் சங்கமித்தன. இதனை வானம்பாடி இதழ் எப்படிக் குறிப்பிட்டது?

'எரிமலையின் உள்மனங்களாய்
அக்கினிக் காற்றில் இதழ்விரிக்கும்
அரும்புகளாய்
திக்குகளின் புதல்வர்களாய்
தேச வரம் பற்றவர்களாய்
அஞ்சாத அமில நதியின்
அலைப் படைகளாய்
மண்ணின் பூக்களாய்
பூமியின் பிரளயங்களாய்
காலத்தின் வசந்தங்களாய்
யுகத்தின் சுவடுகளாய்
நிறங்களின் சிவப்பாய்
மண்ணை வலம்வரும் பறவைகளாய்
விலையிலாக் கவிமடல் வானம் பாடி' எனத் தன்னைப் பறை சாற்றிக்கொண்டது.

புவியரசு, ஞானி, அக்னிபுத்திரன், முல்லை ஆதவன், சிற்பி ஆகியோரே முதன்முதலில் வானம்பாடி இயக்கத்தைக் கண்டோர். பின்னர் இதில் மரபுக் கவிதையிலும் சாதனைப் படைத்த அப்துல் ரகுமான், மீரா, தமிழன்பன், மேத்தா, சக்திகனல், பிரபஞ்சன், பாலா ஆகியோர் வானம்பாடியில் ஐக்கியமாயினர்.

இக்காலத்தில் வானம்பாடியில் இணையாது ஆனால் புதுக்கவிதையில் தனிமுத்திரை பதித்தோர் இருவர். அவர்கள் நா. காமராசன், இன்குலாப் ஆவர்.

புதுக்கவிதை என்றால் இலக்கணமே இல்லை; எப்படியும் எழுதலாம் என்பது தவறாகும். புதுக்கவிதையின் முன்னோடிகளில் எஸ்ராபவுண்ட் புதுக்கவிதையின் இலக்கணம் போல் மூன்றனைக் குறிப்பிடுகின்றார்.

1. எடுத்துக் கொண்ட பொருளைச் சுற்றி வளைக்காது நேராக அணுகுதல்.

2. தேவையற்ற ஒரு சொல் கூட வராதிருத்தல்.

3. கடினயாப்பை நீக்கி இசையின் எளிமையைப் போற்றுதல் எனக் குறிப்பிடுகின்றார்.

வானம்பாடிக்குப் பின்னர், புதுக்கவிதைகளைப் பற்றி ஆராயின் அது ஒரு தனிக்கட்டுரையாக அமையும். புதுக்கவிதைக் கவிஞர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ந. பிச்சமூர்த்தி, வைத்தீஸ்வரன், சி.மணி, தருமு. சிவராமு, நா. காமராசன், இன்குலாப், சிற்பி, அக்னிபுத்திரன், புவியரசு, ஞானி, ஞானக்கூத்தன், அப்துல் ரகுமான், மேத்தா, மீரா, சண்முக சுப்பையா, பச்வய்யா, தமிழன்பன், அபி, கங்கை கொண்டான், சக்திக்கனல், இரவீந்திரன், பா. செயப்பிரகாசம், பாலா, கோ. இராசாராம், கல்யாண்ஜி, கலாப்பிரியா, விக்ரமாதித்தன், மனுஷ்ய புத்திரன், வைரமுத்து, ஆத்மாராம், சேரன், தேவதேவன், கந்தர்வன், பழமலய் ஆகியோரைக் குறிப்பிடலாம். புதுக்கவிதையில் பல திறனாய்வு நூல்களும் தோன்றியுள்ளன. நா.வானமாலை, வல்லிக்கண்ணன், பாலா, இல.செ. கந்தசாமி, ந. சுப்பு ரெட்டியார், ஆ. செகந்நாதன், தமிழன்பன், ந.வீ. செயராமன் ஆகியோரின் திறனாய்வு நூல்கள் குறிப்பிடத்தக்கன.

1930-45 மணிக்கொடியும், 1950 முதல் 1971 வரை எழுத்துப் பரம்பரையும், 1970முதல் வானம்பாடியும் புதுக்கவிதை உலகை ஆக்கிரமித்தன. வால்ட் விட்மனும் எஸ்ரா பவுண்டும், பிரான்ஸ் நாட்டின் ரிம்போவும் வெளிப்படுத்திய இப்புதிய உலகத்தைத் தமிழுக்கு அறிமுகப்படுத்திய இருவர் பாரதியும், பிச்சமூர்த்தியும். இவர்கள் காலம் தான் புதுக்கவிதையின் தொடக்ககாலம் என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. இவர்களால் தமிழ்க் கவிதை உலகில் 'இதுதான் கவிதை' எனும் இலக்கணம் மாறியது. எதுதான் கவிதை இல்லை? எனும் புது இலக்கணம் உருவாகியது. இதனை ந.வீ. செயராமன் 'மனம் என்னும் இருட்டறைக்குள் முடங்கி முடமாகக் கிடந்த கற்பனைகள். வானம்பாடிகளாய்ச் சிறகடித்து இலக்கிய வானில் பறக்கின்றன. இன்றைய புதுக்கவிதை உலகின் அப்பட்டமான உண்மை நிலை இது' என்பர்.

### *பாரதியார்*

பாரதியின் வசன கவிதை புதிய முயற்சி எனும் வ்கையில் வரவேற்கத்தக்கது.

'எல்லா உயிரும் இன்பமெய்துக!
எல்லா உடலும் நோய் தீர்க்க!

எல்லா உணர்வும் ஒன்றாத லுணர்க!
'தான்' வாழ்க!
அமுதம் எப்போதும் இன்பமாகுக!

பாரதியின் இந்த வசன கவிதை யாப்பறியாக் கற்பனை மிக்கோரைக் கவிதைபாட அழைத்தது. இவரின் தாக்கத்தால் அடுத்துப் பிச்சமூர்த்தி புதுக்கவிதையில் காலூன்றினார்.

## ந.பிச்சமூர்த்தி

புதுக்கவிதையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் முதன்மையானவர். மணிக்கொடி குழுவைச் சார்ந்தவர். புதுக்கவிதை முன்னோடிகளாகப் புதுமைப்பித்தன், ந. பிச்சமூர்த்தி, கு.ப.ரா, வல்லிக்கண்ணன் ஆகிய நால்வரையும் குறிப்பிடலாம். ஆயின் இத்துறையில் வெற்றி பெற்றவர் ந.பிச்சமூர்த்தியாகும்.

இவரது புதுக்குரல்கள் கவிதைத் தொகுதியே தமிழின் முதற்புதுக்கவிதை தொகுதியெனலாம். சீனிவாசனின் மணிக்கொடியிலும், பின்னர் சி.சு. செல்லப்பாவின் எழுத்திலும் இவரது கவிதைகள் வெளிவந்தன. இவர் எழுதிய நூல்கள் புதுக்குரல்கள், காட்டு வாத்து (1962), கிளிக்குஞ்சு, பிச்சமூர்த்தி கவிதைகள், பூக்காரி, வழித்துணை (1964)

காலை விடியலை 'உஷை' (விடியல்) எனும் தலைப்பில் நம் கண்முன் கொண்டுவருகிறார்.

கிழக்கென்னும் அரங்கத்தில்
உஷை வந்து நின்றாள்
செம்பட்டுச் சல்லடம்
சொகுசாக உடுத்தி
செம்மலர்க் கூடையை
இடுப்பில் இடுக்கி
சதங்கைகள் சிலம்ப
கீழ்வானில் முளைத்தாள்

## புதுமைப்பித்தன்

சிறுகதை, உரைநடை, புதுக்கவிதை எனத் தமிழில் பல இலக்கியங்களைத் தந்தவர். புதுக்கவிதையில் இவர் வெற்றி பெற்றதாகக் கூற முடியாவிட்டாலும் தொடக்க கால முயற்சி எனும் வகையில் இவை சிறப்படைகின்றன. தம் முதற்கவிதையைப் புதுமைப்பித்தன் புனைபெயரிலேயே வெளியிட்டார். கடவுளுக்குக் கண்ணுண்டு என்பதே அக்கவிதையாகும். இவரது கவிதை கிராம ஊழியனிலும் வெளிவந்தது. மகாகாவியம் என்ற தலைப்பில் வரும் கவிதை

காளான் குடை நிழலில்
கரப்பான் அரசிருக்க
வேளாண் குடியூரின்

வெள்ளெருக்கு மூட்டருகே
கள்ளி தலை தூக்க
காட்டெருமை புறத்தேறி
சிட்டுக் குருவியவள்
சிங்காரப் பாட்டிசைத்தாள்

வசனகவிதை என்று கூறமுடியா அளவு மரபுக் கவிதையின் ஓசை நயத்தையும் பெற்றுள்ளது.

### கு.ப. ராஜகோபாலன்

இவருடைய அனுபவங்கள் சிறுகதையிலும், கவிதையிலும் வெளிப்படுகிறது. பாரதியின் உரைநடைக் கவிதைகளையும், மேலை நாட்டு யாப்பற்ற கவிதைகளையும் அடியொற்றிப் புதுக்கவிதைகளை எழுதினார். எனினும் கவிதையை விடச் சிறுகதையில் ஆர்வம் மிக அதில் ஒன்றிப் போய்விட்டார். தொடக்ககால முயற்சியில் ஈடுபட்டவர் எனும் நிலையில் சிறப்பினைப் பெறுகிறார். புதுக்கவிதை உலகில் இவர் ஆற்றிய பணி மிகக் குறைவேயாகும்.

விடுதலை, உயிர், தரிசனம், பெண்ணின் பிறவி ரகசியம், நீயும் நானும் சிறந்த கவிதைகள்.

### வல்லிக்கண்ணன்

மணிக்கொடிக்குழுவினரில் வல்லிக்கண்ணனுக்குத் தனியிடம் உண்டு. இவரது கவிதைகள் பாரதிதாசன் அடிச்சுவட்டிலே என்ற தலைப்பில் வெளிவந்துள்ளன. ந. பிச்சமூர்த்தியையும், கு.ப.ரா. வையும் தொடர்ந்து இம்முயற்சியில் இவர் ஈடுபட்டதை "அந்நாட்களில் மறுமலர்ச்சி இரட்டையர் ஆக விளங்கிய பிட்சுவும் (ந.பிச்சமூர்த்தி) கு.ப.ராவும் எழுதிக் கொண்டிருந்த கவிதைகளே என்னையும் அம்முயற்சியில் உற்சாகமாக ஈடுபட வைத்தன" என இவர் குறிப்பிடுவதால் அறியலாம்.

1942 முதல் வசன கவிதை எழுதத் தொடங்கினார். புதிய முயற்சி என்ற வேகம் இருந்த அளவு இலக்கிய வலிமையைத் தொடக்க கால நிலையில் புதுக்கவிதையில் கொடுக்க இயலவில்லை.

'திங்களே
நீ வளர்ந்து பூர்ண முறுகிறாய்
பின்தேய்வது ஏன்?
ஏக்கமா? கவலையா? காதலா?
துக்கமா? வெறுப்பா? சோர்வா?
இருளைக் கொல்கிறாய் நீ
அந்த இருளேதின்றதோ உன்னை?

மீண்டும் மலர்கிறாய் ஓர்நாள்
அத்தோற்றம் கவர்ச்சி மிக்கது
உமையின் சிரிப்புப் போல'

### எஸ்.வைத்தீஸ்வரன்

பாலியல் கோட்பாட்டுக் கவிதைகள் மிகுதி. எழுத்தில் எழுதியவர். அழகை ஆதரிப்பவர். உரிமை, உதயநிழல், சகுனம், சவாரி, பயம் போன்ற கவிதைகள் நயமிக்கன.

### சி.மணி

எழுத்தில் தொடக்கநிலையில் எழுதியவர். ஃபிராய்டின் கோட்பாடுகளில் நம்பிக்கை கொண்டவர். நரகம் என்ற நெடுங்கவிதை பாராட்டு பெற்ற கவிதையாகும். இவரது கவிதைகள் வரும்போகும், ஒளிச்சேர்க்கை என இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

### சி.சு. செல்லப்பா

எழுத்து இதழின் ஆசிரியர். மணிக்கொடிக்குப் பின் புதுக்கவிதையை வளர்த்த இதழ்களில் குறிப்பிடத்தக்கது எழுத்தாகும். இவரது கவிதைத் தொகுதிகள் நீ இன்று இருந்தால், மாற்று இதயம் என்பன.

### தருமு சிவராமு

படிம இயல் கவிதைகளில் நாட்டம் கொண்டவர். ஃபிராய்டின் கொள்கையில் ஈடுபாடு மிக்கவர். எழுத்துப் பத்திரிக்கையில் இவர் கவிதைகள் வந்தன. படிமமும் குறியீடும் கொண்ட இவரது கவிதைகள் எடுத்தவுடன் புரிந்து கொள்ளும் தன்மையற்றது. கைப்பிடியளவு கடல், மேல் நோக்கிய பயணம், கண்ணாடியுள்ளிருந்து ஆகியவை இவரது கவிதை நூற்களாகும். இவரது இன்னொரு பெயர் பிரமிள். 1998இல் இவரது கவிதைகள் முழுவதும் பிரமிள் கவிதைகள் என வெளிவந்துள்ளன. இவரது 'விடிவு' எனும் கவிதை படிமக் குறியீட்டிற்குச் சிறந்த கவிதையாகத் திறனாய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

### பசுவய்யா

படிமக்கவிஞர். இயற்பெயர் சுந்தரராமசாமி. கருத்தாழமும் கேலியும் கொண்ட இவரது கவிதைகள் தனித்தன்மை வாய்ந்தவை. இவரது படைப்புகள் நடுநிசி நாய்கள், யாரோ ஒருவனுக்காக என வெளிவந்துள்ளன. 107 கவிதைகள் என்ற பெயரிலும் இவர் கவிதைகள் வந்துள்ளன.

'ஒய்ந்தேன் என மகிழாதே
உறக்கமல்ல தியானம்
பின்வாங்கல் அல்ல பதுங்கல்
எனது வீணையின் மீட்டலில்

கிழிபடக் காத்துக் கிடக்கின்றன
உனக்கு நரையேற்றும் காலங்கள்
எனது கொடி பறக்கிறது
அடிவானத்துக்கு அப்பால்'.

### புவியரசு

மரபிலும் ஆளுமை, புதுமையிலும் திறமை மிக்கவர். இவரது புதுக்கவிதைகள் அழகான படிமங்களையும் குறியீடுகளையும் பெற்று அமையும். இயற்பெயர் ஜெகந்நாதன். வானம்பாடிக் கவிஞர். எனினும் பிற வானம்பாடிக் கவிஞர்களுக்கும் இவருக்கும் வேறுபாடு மிகுதி. இவரது கவிதைத் தொகுப்பு இதுதான், மீறல், ஒரு முக்கிய அறிவிப்பு.

### ஆத்மாராம்

இவருடைய கவிதைகளில் புரிதல் குறைவு என்பர். முதற்கவிதைத் தொகுப்பு காதிதத்தில் கோடு. 1989இல் இவரது மொத்தக் கவிதைகளும் ஆத்மாராம் கவிதைகள் என வெளியாயிற்று.

### கல்யாண்ஜி

இயற்பெயர் கல்யாணசுந்தரம். அனுபவங்களின் வெளிப்பாடு, மனிதமனங்களின் சோகங்கள் கவிதையாய் எழும். மனத்தை நெருடும். தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதையில் தனி இடம் பெற்றவர். 1969 முதல் இன்றுவரை தொடர்ந்து எழுதுபவர். நிகழ்காலம் எப்படியிருக்கிறது எதிர்காலம் இருளாகிப் போயின் எவை கண்ணிற்குத் தெரியும். கை இடுக்கில் இருக்கும் கிழிந்து போன குடை தைக்கப்படாமலே இருப்பது போல்... இதோ கவிதை

'இறகைச் சிலுப்பும் காக்கையை
எச்சில் இலையைத் தின்றபடி
யோசனை செய்யும் பசுமாட்டை
நனைத்த குரலில் பூவிற்று
நடந்து போகும் சிறு பெண்ணை
ஓட்டல் புகையை ரோட்டின் மேல்
பெட்ரோல் சிதறிய கோலத்தைப்
பாராமல் ஏன் அவன்மட்டும்
பரிசுச் சீட்டை விலை சொல்லிக்
கூவுகிறான்? என் கக்கத்துக்
குடையைப் போல் பெரிதாகக்
கிழிந்து போச்சோ அவன் வாழ்க்கை?

### சிற்பி

பேராசிரியர் பாலசுப்பிரமணியம் கவிதை உலகில் சிற்பியாகிறார். வானம்பாடிக் கவிஞர். நிலவுப்பூ, சிரித்த முத்துக்கள், ஒளிப்பறவை, சர்ப்பயாகம், மௌன மயக்கங்கள், சூரிய நிழல், புன்னகை பூக்கும் பூனைகள் இவை இவரது கவிதைத் தொகுதிகள். நடப்பியலைப படம் பிடித்துக் கவிதையாக்குவதில் வல்லவர். அறிவியல் அணுகு முறையும் இவர் கவிதைகளில் காணமுடியும்.

### மீரா

இயற்பெயர் மீ. ராசேந்திரன். இவரது முதற் கவிதை நூல் 1971இல் வெளிவந்த கனவுக்ள் + கற்பனைகள் = காகிதங்கள். வந்த காலத்தில் பெரும் புகழ் ஈட்டிய கவிதைத் தொகுதியாகும். காதலைச் சுவையோடு பாடும் இயல்பு பெற்றவர். இவரது 'ஊசிகள்' தொகுதியும் ஊசிபோன்று சமூகவுணர்வைச் சாடுவது.

உனக்கென்ன
ஒரு பார்வையை வீசிவிட்டுப் போகிறாய்
என் உள்ளமல்லவா,
வைக்கோலாய்ப் பற்றி எரிகிறது....
உனக்கென்ன
போகிறாய் ... போகிறாய்
என் ஆன்மாவல்லவா
அனிச்சமாய் உன் அடிகளில் மிதிபடுகிறது.

### மேத்தா

புதுக்கவிதையை இளைஞர் மத்தியில் கொண்டு சென்றோரில் குறிப்பிடத்தக்கவர் மேத்தா. புதுக்கவிதைக்குப் புதுக்கவிதையில் இலக்கணம் தருகின்றார். இவரது கண்ணீர்ப் பூக்கள், ஊர்வலம், வெளிச்சம் வெளியே இல்லை சிறந்த கவிதைத் தொகுதிகளாகும். இவை தவிர ஒருவானம் இருசிறகு, நடந்த நாடகங்கள் இவரது வேறு கவிதை நூற்கள். 'தேசப்பிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி' சிறந்த கவிதையாகும். மாதச் சம்பளம் வாங்குவோனின் மனநிலையை ஐந்து வரிகளில் பளிச்செனக் காட்டுகின்றார்.

'என்னுடைய சம்பளநாளில்
எண்ணி வாங்குகிற
பளபளக்கும் நோட்டுகளில்
எவரெவர் முகமோ தெரியும்
என்முகம் தவிர'.

### அப்துல் ரகுமான்

கவிக்கோ எனப்போற்றப்படுபவர். பால்வீதி, சுட்டுவிரல், நேயர் விருப்பம், பித்தன், ஆலாபனை, தீபங்கள் எரியட்டும் என ஏழு தொகுதிகள் வெளிவந்துள்ளன. மிகச்சிறந்த கவியரங்கக் கவிஞர். படிமத்தோடு சிறந்த குறியீடுகளைக் கொண்டு அமையும் இவர் கவிதைகளுக்கு வாசகர்களிடம் சிறந்த எதிர்பார்ப்பு உண்டு. பால்வீதியில் இரவு முடிந்து பொழுது விடிய எழுவதற்கு மனமில்லாப் பிச்சைக்காரனின் முனகல் படிமக்காட்சி எப்படி வெளிப்படுகிறது பாருங்கள்.

‘இரவு எறிந்த
எச்சில் இலையின்
நட்சத்திரப் பருக்கையை
நக்கிய சூரியநாய்
என்னையேன்
கடித்துத் தொலைக்கிறது’

இவரது ஆலாபனைக் கவிதைத் தொகுதி சாகித்ய அகாதமி விருது பெற்றது.

### தமிழன்பன்

ஈரோடு தமிழன்பன் தமிழ்ப் பேராசிரியராக இருந்தவர். இவருடைய கவிதைகளில் ஒருவேகமும் அழுத்தமும் மேலோங்கி நிற்கும். மரபுக் கவிதைகள் இயற்றுவதிலும் வல்லவர். 1973இல் வெளிவந்த இவரது தோணி வருகிறது புதுக்கவிதைத் தொகுதி கவிதை உலகில் இவரை நிலை நிறுத்தியது. இது தவிர ஊமைவெயில், தீவுகள் கரையேறுகின்றன, அந்த நந்தனை. எரித்த நெருப்பின் மிச்சம், சூரியப் பிறைகள், மின்மினிக்காடு, சிறகுகள் எனப் பல்வேறு கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. வாழ்க்கையையும் மரணத்தையும் ஒப்பிடும் இரண்டு வரிக்கவிதை குறள் போல் பொருள் மிக்கது.

வாழ்க்கை அந்நிய மொழியில்
மரணம் தாய்மொழியில்.

### நா.காமராசன்

படிப்பு மதுரை தியாகராசர் கல்லூரி. வானம்பாடிக் காலத்தில் அதில் இணையாது ஆயின் வாசகர்களால் பேசப்பட்ட கவிஞர். இவரது கறுப்பு மலர்கள் கவிதைத் தொகுதி வெளிவந்ததும் மாணவர்கள் மத்தியில் பெரும் செல்வாக்குப் பெற்றது. இது தவிர சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் எனும் கவிதைத் தொகுதியும் வந்துள்ளது. தாமரை, புல் என்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதைகள் சிறப்பானவை. பெண்களின் வறுமையை

நாங்கள் நிர்வாணத்தை
விற்பனை செய்கிறோம்
ஆடை வாங்குவதற்காக

எனப்பாடுகிறார். அலிகள் பற்றிய கவிதையில் 'சந்திப்பிழை போன்று, சந்ததிப்பிழை நாங்கள்' என்பது உள்ளத்தை உருக்குவது.

### இன்குலாப்

பொதுவுடைமைக் கருத்துக்களைப் பரப்பும் இன்குலாப் கவிதைகளில் மக்களை விழிப்படையச் செய்யும் கருத்துக்கள் மலிந்து கிடக்கும். அடக்குமுறை மிகுந்த சமூகத்தைப் பார்த்து அறை கூவல் விடுகின்றார்.

வெள்ளை இருட்டு, சூரியனைச் சுமப்பவர்கள், கூக்குரல், இன்குலாப் கவிதைகள் ஆகியன இவரது கவிதைத் தொகுதிகளாகும்.

### தமிழ்நாடன்

சேலத்தைச் சார்ந்தவர். புதுக்கவிதையில் பல்வேறு களங்களைப் பாடு பொருளாகக் கொண்டு பாடியவர். இயற்பெயர் சுப்பிரமணியன். இவரது கவிதைத் தொகுதிகள் காமரூபம், அம்மா அம்மா, நட்சத்திரப் பூக்கள், மண்ணின் மாண்பு முதலியன.

### கலாப்ரியா

சொந்தப் பெயர் சோம சுந்தரம். சொந்த ஊர் திருநெல்வேலி. புதுமைப்பித்தனின் உரைநடையின் தாக்கம் இவரிடம் உள்ளது. கலாப்ரியாவே 'புதுமைப்பித்தனின் பார்வையை வாங்கி என் பாதிப்பில் எழுதினேன்' என்கிறார். இதுவரை மூன்று குறுங்காவியங்களும், ஆறு தொகுதிகளில் ஏராளமாகக் கவிதைகளும் வெளிவந்துள்ளன. நா. பார்த்தசாரதி, தி. ஜானகிராமன், கி. ராஜநாராயணன் போன்ற அறிஞர்கள் இவர் கவிதைகளை மிகவும் பாராட்டியுள்ளனர்.

எதிர்பார்ப்புகளின் ஏமாற்றத்தைச் சோகத்தோடு பாடும் கலாப்ரியாவின் கவிதை

கூட்டிலிருந்து
தவறிவிழுந்த
குஞ்சுப் பறவை
தாயைப் போலவே
தானும் பறப்பதாய்
நினைத்தது
தரையில் மோதிச் சாகும்
வரை.

### அக்னிபுத்திரன்

வானம்பாடி வானத்தில் வட்டமிடக் காரணமாயிருந்த கவிஞர்களில் ஒருவர். கோவை அரசு கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணிபுரியும் இவர்

இயற்பெயர் அரங்கராசன். புதிய சிந்தனையின் வெளிப்பாடு கவிதைகளாய் இவரிடத்தில் வெளிவந்தது. வீதி நாடகங்கள் நடத்திச் சென்னை வீதியை விழிப்படையச் செய்தவர். மிகச் சிறந்த கருத்தரங்கப் பேச்சாளர். 'புதிய போர்வை' எனும் கவிதையில் வஞ்சிக்கப்பட்ட சூழலை இவர் கவிதை நயம்பட மொழிகின்றது.

ஒருமயக்க இருள் தழுவிய முயக்கத்தில்
இந்த மண்ணின் ஆத்மா மறைந்து விட்ட
ஒரு மரண நிழலில்படிந்த முற்றத்தில்
விதவைத் தெருவின் புழுதியின் மேலே
வஞ்சிக்கப்பட்ட எம்பூமியின் மழலை
எப்படிப் படுத்திருக்கும்!
எப்படிப் படுத்திருக்கும்!

தேவதேவனின் குளித்துக் கரையேறாத கோபியர்கள் கவிதைத் தொகுதி சிறப்பானது. விக்ரமாதித்தன் கவிதைகள் பல தொகுதிகளாக வெளிவந்துள்ளன. முதல்தொகுதி 1982இல் ஆகாசம் நீலநிறம் எனும் தலைப்பில் வெளிவந்தது. திரு உத்திர கோச மங்கை, ஆதி, ஊருங்காலம் ஆகியன இவரது வேறு கவிதைத் தொகுதிகளாகும். மனுஷ்யபுத்திரன் கவிதைகள் பல தத்துவார்த்தம் மிக்கவை. காலச்சுவட்டில் இவரது கவிதைகள் பல வந்துள்ளன. இடமும் இருப்பும் இவரது சிறந்த கவிதைத் தொகுதி. பழமலை 1988இல் வெளிவந்த சனங்களின் கதை எனும் கவிதை மூலம் தன்னை நன்கு வெளிப்படுத்திக் கொண்டார். இவரது குரோட்டன்சுகளோடு கொஞ்ச நேரம் சிறந்த கவிதைத் தொகுதியாகும். மௌனியின் கதை போல் அபியின் கவிதைகளுக்கும் இருவிதத் திறனாய்வுகள் உண்டு. மிகச்சிறந்த படிமக் கவிதைகள் எனப் பாராட்டுவோர். கவிதைகளில் வாசகனுக்குப் புரிதலில்லை எனக் கூறுவோர் என இருவகைக் கூற்றுக்கள் இருப்பினும் இவரது 'மௌனத்தின் நாவுகள்', 'அந்தர நடை' இரண்டுமே சிறந்த கவிதைத் தொகுதிகள்.

### ***வைரமுத்து***

திருத்தி எழுதிய தீர்ப்புகள் மூலம் அறிமுகமான இவர் இருபதுக்கும் மேற்பட்ட கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். இன்னொரு தேசியகீதம், தமிழுக்கு நிறமுண்டு சிறந்த தொகுதிகள். திரைப்படத்துறையில் கண்ணதாசனுக்கு அடுத்துச் சிறந்த புகழை ஈட்டி வருபவர். பாரதியார் வாழ்க்கையைக் 'கவிராசன் கதை' என வசன கவிதையாக்கியுள்ளார். தண்ணீர் தேசம் உண்மையில் கண்ணீர் தேசம். சுதந்திரம் எப்படி உள்ளது?

அவன் ஒரு
பட்டு வேட்டி பற்றிய
கனவில் இருந்தபோது
கட்டியிருந்த கோவணம்
களவாடப்பட்டது.

புதுக்கவிதை தமிழுக்குப் புதிய படைப்பாக இருப்பினும் புதுமைகளை ஏற்றல், படைத்தல் தமிழ் மொழிக்குப் புதியதன்று. தொல்காப்பியம் எட்டு வனப்பில் ஒன்று விருந்து என்று கூறி

'விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' எனக்கூறும்.

இந்நூற்பாவிற்கு உரையெழுதிய பேராசிரியர் 'புதிதாகத் தாம் வரவேண்டியவாற்றாற் பல செய்யுளும் தொடர்ந்து வரச் செய்வது' எனப்பொருள் கூறுகின்றார். எனவே புதுக்கவிதைகளும் தொல்காப்பிய விருந்தில் அடங்குவன எனலாம். இன்று புதுக்கவிதைகள் பல்வேறு வடிவங்களைப் பெற்றுவருகின்றன. புதிய சிந்தனையாளர்கள் அழகு சேர்த்து நலம் சேர்க்கின்றனர். இன்று ஆண்டுக்கு நூற்றுக்கணக்கில் புதுக்கவிதை நூல்கள் வெளிவருகின்றன. அவற்றில் எத்தனை விழுக்காடுகள் காலத்தை வெல்லப் போகின்றன. காலம் பதில் சொல்லும். காத்திருப்போம்.

## ஹைகூ கவிதைகள்

சப்பானிய மொழியில் அமையும் குறுகிய அடியோடு (மூன்றடி) கூடி அமையும் கவிதைகள் ஹைகூ கவிதைகள் எனப்படும். இதனை அய்கூ என்றும் எழுதுவர். மேலும் இதனை ஹைகூ, ஹைகு, ஹைய்கு, ஹைக்கூ என்றும் குறிப்பிடுகின்றனர். தமிழில் துளிப்பா (சிறுதுளி எனும் பொருள்), மின்பா, மின்மினிக் கவிதைகள், வாமனக் கவிதைகள் (வாமனன்-குறுகிய) என்றும் வழங்குவர்.

புதுக்கவிதையின் இன்னொரு வடிவமாகத்தான் தமிழில் ஹைகூ கவிதைகள் அமைகின்றன. இக்கவிதைகள் தொடக்க காலத்தில் ஹைகை என்று அழைக்கப்பட்டன. ஆங்கிலத்தில் Haikai என்றே குறிப்பர். இதற்குப் பொருள் சுதந்திரமாய்க் கவிதையை இணைத்தல், கட்டுப்பாடின்மை (Free linked verse) என்பர். சப்பானிய புத்தமதத்தின் ஜென் (Zen) பிரிவு மிகுதியான சுவையான புத்தமதக் கதைகளைத் தருகின்றது. புத்த ஜென் கதைகள் குட்டிக் கதைகள். தங்கள் கருத்தைச் சிறிய அளவில் விளக்கும் பண்பு கொண்ட இவர்கள், (ஜென்மதத்தினர்) சிறிய அளவில் (3 அடிகள்) எழுதிய கவிதை வரிகளே பின்னர் ஹைகூ கவிதையாயிற்று என்பர். சப்பானில் 16 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இக்கவிதைகள் மிகுதியாகத் தோன்றின.

தமிழில் இக்கவிதைகள் பற்றி மிகுதியாக ஆராய்ச்சி செய்தவர் டாக்டர். லீலாவதி ஆவார். 1987இல் 142 கவிதைகள் அடங்கிய சப்பானிய ஹைகூவை வெளியிட்டுள்ளார். உலகிற்கு ஹைகூவின் பெருமையைக் கூறியவர் பாஷோ. பாரதியார் புதுக்கவிதையின் முன்னோடி எனக் கண்டோம். ஹைகூ கவிதை பற்றியும் பாரதி அறிந்துள்ளார். ஹைகூ கவிதைகளைப் பாரதி பாராட்டி எழுதியுள்ளார். ஹைகூ கவிதைக்குச் சீரிலும் அடியிலும் சிலவரையறை உண்டு. ஆயின் இன்று தமிழில் மூன்றடியில் எழுதின் அது

ஹைகூ எனும் நிலை உருவாகியுள்ளது.

முரண்களின் வெளிப்பாட்டில், அழகில் ஹைகூ கவிதை பிறக்கிறது. கடைசி வரிகள் ஹைகூவின் இதயத் துடிப்பு எனலாம். கலாப்ரியா ஹைகூ என்று எழுதாவிட்டாலும் மூன்று வரிகளில் இவர் எழுதிய கவிதை ஹைகூ கவிதையாகிறது.

அழகாயில்லாததால்
அவள் எனக்குத்
தங்கையாகிவிட்டாள்

இக்கவிதையின் முரண் ஹைகூ ஆகிறது.

தொடக்ககாலத்தில் கணையாழி, தீபம், நடைபோன்ற இதழ்கள் சப்பானிய ஹைகூ கவிதைகளைத் தங்கள் இதழ்களில் மொழிபெயர்த்தன. அதன் பின்னர் அப்துல் ரகுமான் போன்றோர் இம்முயற்சியில் இறங்கினர். அவரது பால்வீதியில் சில கவிதைகள் ஹைகூ பாணியில் அமைகின்றன. இன்று தமிழ்நாட்டில் 500க்கும் மேற்பட்ட ஹைகூ கவிதைத் தொகுதிகள் நூல் வடிவில் உள்ளன.

பேராசிரியர் தி.லீலாவதி ஹைகூ பற்றிப் பல்வேறு வகையில் திறனாய்வு செய்த போதிலும் கவிஞர் அமுதபாரதியே புள்ளிப்பூக்கள் எனும் முதல்தமிழ் ஹைகூ தொகுதியை வெளியிட்டார். பாரதியார் திருக்குறளும் ஒருவகையில் ஹைகூ கவிதையே என்பார். சில ஹைகூ கவிதைகள் அடிப்படைக் கோட்பாட்டை எள்ளி நகையாடுகின்றன.

காதலில் வெற்றி
இருவர்க்கும் கல்யாணம்
தனித்தனியாக

அமுதபாரதியின் புள்ளிப் பூக்களில் பல கேள்விக் கதைகள் அதில் யார்? எனும் தலைப்பில்

அந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங் குழல்?

ஒருதேடலைத் தரும் அழகியல் கவிதையாக மலர்கிறது.

தமிழன்பன் கள்ள ஓட்டை நகையாட ஹைகூவைத் தேடுகிறார்

ஓட்டுப் போட்டுவிட்டுத்
திரும்பிவந்த பிணம் திடுக்கிட்டது
தனது கல்லறையிலே வேறொரு பிணம்

பேராசிரியர் தி. லீலாவதி 'இதுதான் ஹைகூ' எனும் நூலில் ஹைகூவின் தோற்றம் முதல் வளர்ச்சி வரை நன்கு திறனாய்கின்றார்.